**Ministry of Education**

Minister

315 Front Street West
Toronto ON  M7A 0B8

**Ministère de l'Éducation**

Ministre

315, rue Front Ouest
Toronto ON  M7A 0B8

Ontario

பெற்றோருக்கு அமைச்சரின் கடிதம்: COVID-19 Child Benefit Program (சிறுவர் நிவாரணத் திட்டம்)

ஏப்ரல் 26. 2021

அன்பான ஒன்ராறியோப் பெற்றோரே,

ஒன்ராறியோ மக்கள் நம்பமுடியாதளவுக்கு ஓர்மத்தையும் மனவுறுதியையும் இந்தத் தொற்றுநோய்ப் பரவல் காலம் முழுவதும் காட்டியிருக்கின்றனர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எதிர்பாராத சவால்கள் மற்றும் நிதி அழுத்தங்கள் நிறைந்த ஒரு கடினமான காலமாக இது இருந்து வருகிறது. அதனால்தான், தொற்றுநோய்ப் பரவலின் ஆரம்பத்திலிருந்து, ஒன்ராறியோக் குடும்பத்தவர்களுக்கு நேரடி நிதி உதவியை வழங்குவதற்கு எங்களின் அரசாங்கம் முன்வந்திருந்தது.

Ontario COVID-19 Child Benefit ஊடான அடுத்த சுற்றுக் கொடுப்பனவுகளை இரட்டிப்பாக்குவதன் மூலம் பெற்றோருக்கான ஆதரவை நாங்கள் இப்போது அதிகரித்து வருகிறோம் என்பதை உங்களுக்கு நினைவூட்டுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.  நிதியளிப்பின் இந்தப் புதிய சுற்றின் கீழ், 0 வயது முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான ஒவ்வொரு பிள்ளைக்கும் $400 பெற்றோருக்குக் கிடைக்கும், அத்துடன் விசேட தேவைகளைக் கொண்ட 21 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய பிள்ளைகள் மற்றும் இளையோர்களைக் கொண்ட பெற்றோருக்கு ஒவ்வொரு பிள்ளைக்கும் $500 கிடைக்கும். மாணவர்களுக்கான முந்திய ஆதரவுத் திட்டத்தின் கடைசி சுற்றின் கீழ் கிடைத்த கொடுப்பனவுகளை இது இரட்டிப்பாக்குகிறது.

மாணவர்களுக்குரிய கொடுப்பனவுகளுக்கான ஆதரவுகளைப் பெற்றிருந்த பெற்றோருக்கு ஏப்ரல் 26, 2021 முதல் புதிய நிவாரணங்கள் கிடைக்கும். அதற்காக அவர்கள் எதுவும் செய்யவேண்டியதில்லை. மாணவர்களுக்கான ஆதரவுத் திட்டத்திற்கு விண்ணப்பித்திராத அல்லது அந்த ஆதரவு கிடைத்திருக்காத பெற்றோர், மே 3 முதல் மே 17 வரை நிதியுதவிக்கு விண்ணப்பிக்க முடியும். இந்தப் புதிய சுற்றுக்கு எப்படி விண்ணப்பிப்பது என்பது பற்றிய மேலதிக தகவல்களை அடுத்தடுத்த வாரங்களில் Ontario COVID-19 Child Benefit இன் புதிய வலைத்தளத்தில்

பார்க்கக்கூடியதாக இருக்கும்.

இந்த முதலீடு மக்களின் ஆரோக்கியம் மற்றும் எங்களின் பொருளாதாரத்தைப் பாதுகாப்பதில் கவனம்செலுத்தும் 2021 ஒன்ராறியோ வரவுசெலவுத்திட்டத்தின் ஒரு பகுதியாகும், COVID-19 ஐ எதிர்த்துப் போராடுவதற்கும், எங்களின் மாணவர்கள் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கும், வலுவான பொருளாதார மீட்சிக்கான அடித்தளத்தை அமைப்பதற்கும், தன்னால் முடியுமான அனைத்தையும் செய்வதற்கான உறுதிப்பாட்டில் ஒன்ராறியோ அரசாங்கம் தொடர்ந்தும் மாறிலியாக இருக்கின்றது.

எங்களின் சமூகத்தின் அனைத்து அம்சங்களையும் COVID-19 பாதித்துள்ளது, அதிலும், குறிப்பாகப் பாடசாலை வயதுப் பிள்ளைகள் உள்ள பெற்றோருக்கு தொற்றுநோய்ப் பரம்பல் சவாலாக இருந்து வருகின்றது என்பதை நாங்கள் உணர்கிறோம். அதனால்தான், இந்தத் தொற்றுநோய்ப் பரவல் காலத்தின்போது குடும்பத்தவர்களுக்குச் சில உதவிகள் உடனடியாகத் தேவைப்படுகின்றன என்பதுடன், அவர்கள் அதற்கு உரித்துடையவர்கள் என்பதையும் உணர்ந்து எங்களின் அரசாங்கம் பெற்றோரின் கைகளில் பணத்தை விரைவாகச் சேர்ப்பிக்கின்றது, - தங்களின் குடும்பத்தினரின் தேவைகள் எவை என்பதைப் பெற்றோர் நன்கறிவார்கள்

தடுப்புமருந்துகளின் வருகை, இதற்கொரு தீர்வு விரைவில் வருமென்ற நம்பிக்கையைத் தருகிறது.

உண்மையுள்ள,

கௌரவ Stephen Lecce
கல்வி அமைச்சர்